செ.வெ.எண்: 704/2016 நாள்: 07.10.2016

# பத்திரிகை செய்தி

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் பகுதியில் செயல்பட்டு வரும் வலை கம்பெனி ஒன்றில் வடமாநிலத்தை சார்ந்த ஜகுனு குமார் என்ற சிறுவன் வேலை செய்து வருவதாகவும், சிறுவனை சொந்த மாநிலத்திற்கு அழைத்து செல்வதற்கு அவனது உறவினர் வந்து கேட்டபோது நிறுவனத்தின் உரிமையாளர் இச்சிறுவனை தன்னுடன் அனுப்புவதற்கு மறுப்பதாகவும், சிறுவனை மீட்டு தருமாறும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு சிறுவனின் உறவினர் தெரிவித்த புகாரின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு படி சம்பந்தப்பட்ட நிறுவனத்தினை 05.10.2016 அன்று மாலை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி S. குமுதா தலைமையில் குழந்தைகள் நலக்குழு தலைவர் A.M. அப்துல் ஹக்கீம், தொழிலாளர் நலத்துறை துணை ஆய்வாளர் திரு. கார்த்திகேயன், ஆள்கடத்தல் தடுப்புபிரிவு காவலர் திருமதி. சுஜி மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு பணியாளர்கள் அடங்கிய குழுவினர் ஆய்வு செய்தனர். ஆய்வின்போது ஜகுனு குமார் என்ற சிறுவனை மீட்டு மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் குழந்தைகள் நலக்குழுவில் ஆஜர்படுத்தி, பின்னர் சிறுவன் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு பணியாளர்கள் மூலம் திருநெல்வேலி சரணாலயம் வரவேற்பு பிரிவில் ஒப்படைக்கப்பட்டு, சிறுவனை சொந்த மாநிலத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுபோன்று வடமாநிலத்தில் இருந்து இங்கு தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறுவர்களின் நலன் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டும், குழந்தை தொழிலாளர்கள் இத்தகைய தொழிற்சாலைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனரா என்பதனை உடனடியாக ஆய்வு செய்வதற்கு மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் தலைமையில் ஆய்வு குழு அமைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள். இக்குழுவில் குழந்தைகள் நலக்குழு தலைவர் / உறுப்பினர், தொழிலாளர்துறை ஆய்வாளர் மற்றும் ஆள்கடத்தல் தடுப்பு பிரிவு காவல்துறையினர் உறுப்பினராக உள்ளனர். ஆய்வின்போது ஏதேனும் குறைபாடுகள் கண்டறியப்பட்டாலோ அல்லது குழந்தை தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டது கண்டறியப்பட்டாலோ கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன் சிங் R. சவான் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
கன்னியாகுமரி மாவட்டம்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**